Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

நாகர்கோவிலில்

அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம்



ஏப்ரல் 14
(வியாழக்கிழமை)

இடம் : விஜயதா திருமண மண்டபம்,
W.C.C. ரோடு, நாகர்கோவில்

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா & மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 0431 – 2765386; 94889 08328 & 82203 17472

சென்னையில்
ஏப்ரல் 16
சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

Dr. ஆனந்த ஸ்திரா அவர்களைச்
சந்தித்து, ஆலோசனை பெற்று
ஜெபிக்க வேண்டுமா? வாருங்கள்!

இடம் : YMCA, ரித்தர்டன் ரோடு,
வெப்பேரி, சென்னை.

தொடர்புக்கு : 94888 45627; 77081 53666 & 97907 01873

சிறப்பு நேரலை நிகழ்ச்சி



(துதி ஆராதனை, தேவ செய்தி,
வல்லமையான ஜெபம்)

அற்புத ஆராதனை
காணத்தவறாதீர்கள்

தேவ செய்தி
ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா,
டேவிட் பால்

14.04.22
மாலை 7:00 மணி
Live @
Ministry of Jesus
jonathanmosesstira
jonathanmosesrajstira

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:4 ஏப்ரல் 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 8 ISSUE NO : 4 April 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

## இயேசு சிலுவையிலே வெற்றிசிறந்தார்



## மரணத்தையும் பாதாளத்தையும் வென்ற இயேசு

1 கொரிந்தியர் 15:55-57



**இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்!**
**அவர் மிகுந்த மனதுருக்கமும், வல்லமையும் உடையவர்!**
**நொறுங்குண்ட தமது ஊழியக்காரரின் ஜெபத்தைக் கேட்டு**
**இன்றும் மகத்துவமாக செயலாற்றுகிறார்!**

## நம் நினைவுகளைப் பார்க்கிலும் தேவனின் நினைவுகள் மிகவும் உயர்ந்தவை



நான் ஹைதராபாத்தில் வசித்து வருகிறேன். 2018ஆம் ஆண்டு மக்னாயிம் ஆலயத்தின் சார்பாக பொதுக்கூட்டம் ஒன்று Rev.JohnBabu & Pr. Jonathan அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. பொதுக் கூட்டத்தில் பங்குபெற்றேன். தேவசெய்தி வழங்கிய Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களின் வார்த்தைகள் மிகவும் கிருபை உள்ளதாகவும், அன்புள்ளதாகவும், வல்லமையுள்ளதாகவும் காணப்பட்டது. என் இதயத்தை அதிகமாக தொட்டது, ஆறுதல்படுத்தியது. எப்படியாவது அரபுநாடுகளுக்கு சென்று வேலை தேடி பிழைக்கவேண்டும் என்று இருந்தேன். அந்த நேரத்தில் கர்த்தர் சகோதரர் மூலமாக **"என் பெயரை பலமுறை சொல்லி, சாமுவேல் ஜான், அந்நிய நாட்டு பணத்தில் தான் கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்க வேண்டுமா? இந்தியாவிலேயே கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார், கலங்காதே! இங்கேயே தொழிலை ஆரம்பி, தேவன் உன்னை மிகவும் ஆசீர்வதிப்பார்"** என்று கூறினார்.



அதன்படியே நான் எங்கள் பகுதியில் மெயின் ஹைவேஸ்-ல் ஒருதொழிற்கூடத்தை ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். தொழிலை தேவன் அற்புதமாக ஆசீர்வதித்தார்! இன்று நான் நன்றாக இருக்கிறேன். அதுமாத்திரமல்ல, விசுவாசமுள்ள ஒரு பெண்ணை திருமணம் முடிக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். எங்களுக்கு இரண்டு குழந்தைகளை கர்த்தர் கொடுத்தார். பெரியதொரு வீட்டைக் கட்டும்படி சர்வவல்ல தேவன் எனக்கு உதவி செய்தார். என்னிடம் இருந்தது 18 லட்சம் ரூபாய் மாத்திரமே, ஆனால் ஒருகோடி ரூபாய்க்கு வீட்டை கட்டுவதற்குரிய தேவைகளை கர்த்தர் அதிசயமாக சந்தித்தார். இன்று நான் ஒருசபைக்கு சென்று கொண்டு இருக்கிறேன். சகோதரர் மூலம் கர்த்தர் சொன்னபடியே ஆசீர்வதிக்கப்பட்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**- திரு.சாமுவேல் ஜான், ஹைதராபாத்**

## சிறுநீரகக் கோளாறினால் மரணத்திற்கு நேராக சென்ற மகன், தேவ கிருபையால் ஜீவனை பெற்று 24 ஆண்டுகளாக நலமுடன் இருக்கிறான்



எனது மகனுக்கு நான்கு வயதாக இருக்கும்பொழுது சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு மருத்துவமனையில் அட்மிட் செய்தோம். மகனை பரிசோதித்துப் பார்த்து விட்டு மருத்துவர்கள் கூறியது, **இனி மகன் பிழைப்பது கடினம், சிகிச்சை அளித்து பயனில்லை** என்று கூறிவிட்டார்கள். அந்த சமயம் நானும் எனது சகோதரியும் கண்ணீர் விட்டு கதறி அழுதோம். குழந்தையை காப்பாற்ற வழியே இல்லையா என ஏங்கினோம், தவித்தோம். எந்த வழியும் கிடைக்காமல் கண்ணீரில் நாட்களை கடத்தி வந்தோம். மகன் ஒவ்வொரு நாளும் மிகவும் ஆபத்தான கட்டத்திற்குள் சென்று கொண்டிருந்தான். இந்த நிலையில் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டம் சேலத்தில் நடைபெறுவதை அறிந்து நம்பிக்கையோடு மகனை தூக்கிக் கொண்டு வந்தோம். எங்களை பார்த்த சகோதரர் செய்தி மற்றும் ஜெபம் முடியும் வரை காத்திருங்கள்

- இதன் தொடர்ச்சியை 16-ஆம் பக்கம் பார்க்க

**- திருமதி. சுகந்தி, ஈரோடு**


புத்தம் புதிய நிகழ்ச்சி

# அனுதின அற்புதம்

DAILY MIRACLE

தினமும் காலை 5 மணி



MINISTRY OF JESUS

-ல் காணத்தவறாதீர்கள்



# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும்

காலை 9.30 மணி – 11.30 மணி

✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
✓ அனல்மூட்டும் தேவ செய்தி
✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

Live @ My Deliverance Church

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.





# PRAISING TIME

நமது

YouTube MINISTRY OF JESUS

சேனலில் கண்டு

தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்

# அன்பரின் ஊழியம்

மலர்:8 ◆ ஏப்ரல் 2022 ◆ இதழ் 4




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான பங்காளர்களுக்கும், இனிய வாசகர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்த்தரின் பெரிதான கிருபையினால் நாம் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி கொண்டிருக்கிறோம். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம். அதே சமயத்தில் இனிமேல் கொரோனா கால இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்க ஜெபிப்போம். **கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக் கொள்ளும், அப்பொழுது திரும்புவோம், பூர்வ காலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதிய வைகளாக்கும். புலம்பல் 5:21**-ன்படி கடந்த நாட்களில் உங்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை, வேலையின்றி, சம்பளமின்றி தவித்த நாட்களுக்கு சரியாய், வருகின்ற நாட்களில் உங்கள் கையின் பிரயாசங்களை கர்த்தர் இரட்டிப்பாய் பெருகச் செய்து எல்லாவற்றிலும் செழிப்பை கட்டளையிடுவாராக! வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து தொடர்ந்து காப்பாராக!

ஆவிக்குரிய ஆசீர்வாதங்களிலும் உங்களை கர்த்தர் பலமடங்காய் ஆசீர்வதிப்பார். நான் எப்படி ஆத்தும ஆதாயம் செய்வேன் என உங்களில் பலர் ஏங்கிக் கொண்டிருக்கலாம். உங்களுக்கு நான் சொல்வது, நம்முடைய சமூக ஊடகங்கள் (Ministry of Jesus) வழியாக வருகின்ற தேவ செய்திகளை உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு share செய்யுங்கள். அந்த செய்திகள் மூலமாக கர்த்தர் அவர்களோடு பேசுவார். முக்கியமாக மனமாற்றத்தை தருவார். அவர்கள் வாழ்வில் இடைபட்டு, ஒரு அதிசயத்தை செய்வார்.

மார்ச் மாதம் ஈரோடு, பாண்டிச்சேரி மற்றும் திருச்சியில் நடைபெற்ற கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் வாழ்வில் கர்த்தர் பல நன்மையான காரியங்களைச் செய்தார்.

அன்பரின் ஊழிய ஜெபஸ்தல பராமரிப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த பராமரிப்பு வேலைக்குரிய பணத்தேவைகள் அதிகமாய் இருக்கிறது. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி உற்சாகமாய் தாங்குங்கள். இந்த பணிகளுக்காக ஜெபியுங்கள்.

மார்ச் மாதமும் S.J.Saves Trust மூலமாக பல உதவிகளை செய்தோம். இந்த பணியில் எங்களோடு இணைந்து தாங்கி வருகிற உங்களை கர்த்தர் நினைத்து அதிகமாய் ஆசீர்வதிப்பார்.

இந்த மாதம் நடைபெறயிருக்கும் நேரலை நிகழ்ச்சிகளை (Live Programs) தவறாமல் பாருங்கள். அதன் விபரம் அட்டையின் பின்பக்கத்தில் இருக்கிறது.


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

அன்பரின் ஊழியத்தின் வேலை வாய்ப்பு தகவல்கள் அனைத்தும் 11-ம் பக்கத்தில் இருக்கிறது. உங்கள் குடும்பத்தினர் அல்லது உறவினர்கள், நண்பர்கள் யாரேனும் வேலைக்காக காத்திருப்பார்கள் என்றால் உடனே எங்களோடு தொடர்பு கொள்ளும்படி சொல்லுங்கள்.

ஒவ்வொரு மாதமும் திருச்சி அன்பரின் ஊழிய ஜெபஸ்தலத்தில் கடைசி சனிக்கிழமையன்று அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம் நடைபெற்று வருகிறது உங்களில் அநேகர் எங்களை நேரில் பார்க்க விரும்பு கிறீர்கள். ஆகவே ஜெபம் நடைபெறுகின்ற இந்த நாட்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். **...நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். (எபேசியர் 5:16) (கொலோ.4:5)** நாங்களும் உங்களுக்காக குடும்பமாய் ஜெபிக்கிறோம். அந்த நாளில் எங்களை நேரில் சந்தித்து ஆலோசனை பெறலாம். கூட்டத்தில் பங்குக் கொண்டவர்களின் சாட்சிகளையெல்லாம் பத்திரிக்கையில் நீங்கள் வாசித்திருப்பீர்கள். நீங்களும் இந்த ஜெபத்திற் குடும்பமாய் வந்து கலந்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களையும் ஒரு சாட்சியாய் எழுப்புவார்.

இந்த நாட்களில் கிறிஸ்துவுக்காக பாடுபடு கிறவர்கள் உலகெங்கும் இருக்கின்றனர். அவர்களை நம்முடைய ஜெபத்தில் மறவாமல் தாங்குவோம். விசேஷமாக எங்கள் அனைவருக்காகவும், அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். எங்களை தனியே சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் முன் அனுமதி பெற்று வாருங்கள்.

**நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப் பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவை யிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கலாத்தியர் 6:14**-ன்படி நமக்காக சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவைக் குறித்து மேன்மை பாராட்டுவோம். சாபமாக எண்ணப்பட்ட அந்த சிலுவை மரணம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்கு ஆசீர்வாதத்தைத் தருகின்றது. சிலுவையில் மரித்த இயேசு கிறிஸ்து அப்படியே மரித்த நிலையில் இல்லை, மகிமையாய் உயிர்த்தெழுந்தார். இந்த உயிர்த்தெழுதலின் மகிமையும், ஜீவனும் உங்கள் வாழ்க்கையில் எப்பொழுதும் கிரியையை செய்வதாக!

உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாள் வாழ்த்துக்கள்!

## HAPPY RESURRECTION DAY!

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

## இம்மாத வாக்குத்தத்தம்

ஏசாயா 29:19
யோவான் 11:25
அப்போஸ். 4:33
ரோமர் 1:5

## இதயம் தொட்ட எண்ணம்

The pain of the cross
leads to
The glory of the resurrection.

சிலுவையின் வேதனை
உயிர்த்தெழுதலின்
மகிமைக்கு கொண்டு செல்கிறது.

Tamil Whats App No: 95004 87059

## ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

State Bank of India, Cantonment, Trichy Main Branch
IFS Code : SBIN 0000930

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.




## கன்னியாகுமரி பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதியாக கீழ்க்கண்டவர் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவரிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி : 82203 17472**



# இயேசு சிலுவையில் வெற்றி சிறந்தார்!

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

***மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் – 1கொரி 15:55, 57.***

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான தேவ பிள்ளைகளே!

இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள்!

வானத்திலிருந்து மழையையும், செழிப்புள்ள காலங்களையும் தருகிற நம் தேவாதி தேவன் தாமே கடந்த நாட்களில் நம்மை கண்மணிபோல பாதுகாத்து வந்தார். அவரை மனதார ஸ்தோத்தரிப்போம். உங்களுக்கு பல்வேறு பணிகள் இருப்பினும், எங்களை நினைத்து ஊழியத்திற்காக ஜெபிப்பதற்காக தேவனை துதிக்கிறோம்.

விசேஷமாக என்னுடைய பிறந்த நாளை நினைவுகூர்ந்து, ஜெபித்து வாக்குத்தத்த வசனம் அனுப்பி, கடிதம் எழுதி, நேரில் வந்து வாழ்த்து கூறிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். **ரோமர் 16:16**-ன்படி கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவரை ஒருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துதலை அனுப்பினதற்காய் உங்களுக்கு எனது நன்றி! நீங்கள் எங்களுக்காக ஜெபிக்கிறதுபோல நாங்களும் உங்களுக்காக அனுதினமும் ஜெபித்து வருகிறோம். உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் மற்றும் சரீரப்பிரகாரமான காரியங்களில் பலத்தின் மேல் பலம் அடைந்து வெற்றியுள்ள வாழ்க்கை வாழ கர்த்தர் உதவி செய்வாராக! உங்களுடைய உண்மையான அன்பு பிதாவாகிய தேவனோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் உள்ள அன்பிலும், ஐக்கியத்திலும் என்றென்றும் நிலைத்திருப்பதாக.

எனக்கன்பான தேவ ஜனங்களே! கிறிஸ்து இயேசுவின் சிலுவை பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், அவருடைய இரண்டாம் வருகையை குறித்து நீங்கள் நன்கு அறிந்திருக்கலாம். எனினும் தொடர்ந்து உங்களுக்காக நான் ஜெபித்து எழுதுகின்ற இந்த செய்தியை நீங்கள் கவனமாய் ஜெபத்துடன் வாசியுங்கள்.

தேவாதி தேவன் மனுக்குலத்தை மீட்க இயேசுவாக உலகில் பிறந்தார். அவர் பிறப்பு மிகவும் அதிசயமானது. அவருடைய பிறப்பை உறுதிப்படுத்தி, வாழ்த்தியது தேவனுடைய பரலோக தூதர்களே! மனிதர்கள் குழந்தைகளை வாழ்த்தலாம், போற்றலாம். ஆனால் பரலோகத்தில் உள்ளவர்கள் ஒரு குழந்தையின் பிறப்பை போற்ற வேண்டும் என்றால் அது எத்தனை பெரிய அற்புதமான காரியம். **(லூக்கா 1: 28-32; 2: 10-15)** அண்ட சராசரங்களையும் தம்முடைய நாம மகிமைக்கென்று உருவாக்கின தேவன், தம்முடைய சாயலாக படைக்கப்பட்ட மனுக்குலத்தை மீட்க, மனிதனுக்கு விரோதமாக இருந்த தேவ தண்டனையாகிய மரணத்தை தாமே ஏற்றுக்கொண்டு மரணத்தை ஜெயமாக விழுங்கினார். அவர் சிலுவையில் நமக்காக சொல்லொண்ணா வேதனைப்பட்டது உண்மையிலும் உண்மை. இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்த பிலாத்து, தனது கவர்னர் மூலமாக அந்த காலத்து வரலாற்றில் எழுதியுள்ளார். இயேசு சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தவுடன் அநேகர் கண்டு சாட்சி கூறினார்கள். ஒரு

சமயம் 500 பேருக்குக் கூட காட்சியளித்தார். கல்லறை அவரை அடைத்து வைக்க முடியவில்லை. இறந்து மூன்று நாளாகியும் ஒரு துர்நாற்றமும் உண்டாகவில்லை. அதற்குப் பதிலாக கொலை செய்யப்பட்ட சரீரத்திலேயே உயிரோடு எழுந்தார்.

- **அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்.**
- **அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள், உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?**
- **நான்தான் என்று அறியும்படி, என்கைகளையும், என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள். நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக் கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி,**
- **தம்முடைய கைகளையும் கால்களையும் அவர் களுக்குக் காண்பித்தார் - லூக்கா 24:37-40**

தேவனுடைய பலத்த கரம் அவரை உயிரோடு எழுப்பியது. இன்றைக்கும் 2022 ஆண்டுகளுக்கு முன் உயிரோடு எழுந்த நம் கர்த்தர் தாழ்மையோடும், உண்மையோடும் தேடுகின்ற மக்களுக்கு காட்சி யளிக்கிறார். அவரை அறியாத, வாழ்வில் நம்பிக்கை இழந்து போன ஏழை மக்களுக்கும், உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து மகிமையோடு காட்சியளிக்கிறார். நீங்களும் அவரை தேடினால் அவர் உண்மையாகவே உங்கள் வீட்டிற்கு வருவார், உங்களை அன்போடு அரவணைப்பார்!

என்னுடைய சிறு வயதில் சரீர பலவீனத்தால் அழுது கொண்டிருந்தப் பொழுதெல்லாம் இயேசுவின் மென்மையான, காயப்பட்ட கரங்கள் என்னை தொட்டிருக்கிறது. அவரை மாம்ச சரீரத்தில் நான் பார்த்தேன். இயேசு கிறிஸ்து ஒரு ஆவி அல்ல, நமக்காக மரணத்தை ஜெயித்த ராஜாதி ராஜா! இயேசு ஒரு பாவமும் செய்யாதவராயிருந்தும் கொடுமையான மரணத்திற்கு தன்னை தாழ்மையோடு ஒப்புக் கொடுத்தார். அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையை குறித்து சுருக்கமாக இச்செய்தியில் நாம் பார்ப்போம்.

## 1. அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்!

நம் எல்லாருடைய பாவங்களையும் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக் குட்டியாக இயேசு உலகிற்கு வந்தார். அதற்கான தேவ தண்டனையையும் பெற்றார். **ரோமர் 6:23**-ன்படி **பாவத்தின் சம்பளம் மரணம்** என்பது நீதியுள்ள நியாயாதிபதியாகிய தேவனுடைய தீர்ப்பு. நாம் அனைவரும் ஆதாமின் வம்சத்தில் வந்தபடியால் அந்த தண்டடைனக்கு தப்பிக்க முடியாமல் தவிக்கிறோம். **(ஆதி. 3:19; 2:17).** எனினும், நம்மை உருவாக்கின கர்த்தராகிய இயேசு நமக்காக அந்த தண்டனையை பெற்றதின் நிமித்தம் நாம் மறுவாழ்வு பெற்றுக் கொள்கிறோம். பாவத்தின் கூறு உடைக்கப்பட்டு, மரண பயமும் நம்மை விட்டு நீங்குகிறது. பாவமில்லாத வாழ்க்கைக்கு நேராய் திருப்பப்படுகிறோம்.

**ஒரு குறிப்பிட்ட ஊரில் ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் இருந்த ஒரே மகனுக்கு திருமணம் நடந்தது. அவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணும் மிகப்பெரிய வசதி படைத்த குடும்பத் தை சார்ந்தவள். வழக்கம் போல திருமணம் கதீட்ரல் ஆலயத்தில் நடந்து முடிந்து, தங்கள் அரண்மனைக்கு திரும்பினார்கள். ஏராளமான வெகுமதிகள் அவர்களுக்கு கிடைத்தது. அதில் கடைசியாக ஒரு மரப்பெட்டி ஒன்று காணப்பட்டது. அதின் உள்ளே தங்கம் அல்லது வைரம் இருக்கும் என்று நினைத்து அதை திறந்து பார்த்தார்கள். அதில் ஒரு கண்ணாடி பெட்டி இருந்தது, அதற்குள் வைக்கோல் நிரப்பப்பட்டிருந்தது. ஆனால் அதற்குள் இருந்த வைக்கோலை எடுத்தபொழுது கண்ட காட்சி அனைவரையும் திகைக்க வைத்தது. அதில் உடைக்கப்பட்ட, முறிக்கப்பட்ட ஒரு வலது கை இரத்தம் வடிய வடிய காணப்பட்டது. அதில் ஒருவர் தன்னுடைய இரத்தத்தால் ஒரு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அதில் எழுதப்பட்ட வார்த்தைகள் "மகனே! தகப்பனாகிய நானும், உன் தாயும் உன் நிமித்தமாக எவ்வளவோ இன்னல்களையும், அவமானங்களையும் அனுபவித்தோம். ஏனென்றால் சிறு வயது முதல் நீ கொலைகார கும்பலோடு தொடர்பு வைத்துக்கொண்டு, பல துன்மார்க்கமான காரியங்களை செய்தாய். கடைசி யாக ஒரு நாள் இரவு நேர களியாட்டத்தில் பங்கு பெற்று அங்கு உனக்கு விரோதமாக சண்டைபோட்ட இருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்து அவர்களை துண்டு துண்டாக அறுத்து எரிந்தாய். (உன்னுடய துஷ்ட குணம் மாற வேண்டும் என்று உன் தாய் எவ்வளவோ பாடுபட்டாள். ஆனால் நீ மாறவில்லை. இதன் நிமித்தம் உன் தாய் இறந்து போனாள்) கொலை செய்து விட்டு உன்னுடைய அருமையான கோட் மற்றும் வெள்ளை சட்டையில் இரத்தம் வடிய வடிய வீட்டிற்கு ஓடி வந்தாய். உன்னை காவல்துறை அதிகாரிகள் விரட்டிக் கொண்டு வந்தார்கள். நான் உன்னை தூரத்தில் இருந்து பார்த்தேன். உன்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்றே நினைத்தேன். வீட்டிற்குள் வந்த நீ மயங்கி விழுந்தாய். உடனே நான் உனது கோட், சட்டையை கழற்றி நான்**

அணிந்து கொண்டு, உனக்கு என்னுடைய மாசற்ற கோட், சட்டையை அணியும்படி செய்தேன். காவல்துறை அதிகாரிகள் வீட்டிற்குள் வந்தார்கள், என்னை பிடித்து சிறையில் அடைத்தார்கள். நீதிபதி "உனக்கு திருமணம் நடக்கும் இந்த நாளில் என்னை மின்சார நாற்காலியில் உட்கார வைத்து சாம்பலாக்கும்படி தீர்ப்பு வழங்கினார்" இது தான் எனக்குக் கிடைத்த தண்டனை. உனது திருமண நாளில் என் ஜீவன் போகும். ஆனால் உன்னை எப்படி திருத்துவது என்று எனக்கு தெரிய வில்லை. முடிவில் என்னோடு கூட மரண தண்டனை அனுபவிக்க போகிற பயங்கரமான கொலை காரனிடம் 100UK Pounds கொடுத்து, கட்டாயத்தின் பேரில் என்னுடைய வலது கையை முறிக்க சொன்னேன். அவன் சட்டென்று என் கையை முறித்தான். உடனடியாக ஜெயில் வார்டனை அழைத்து, அவரிடம் கெஞ்சி கேட்டுக் கொண்டதின்படி உனக்கு இதை பார்சலாக அனுப்பினார்கள். என் மகனே! நீ இப்பொழுது நல்ல ஒரு பெண்ணை திருமணம் செய்து இருக்கிறாய், இனிமேலும் அந்த துஷ்ட குணங்களோடு வாழாதே! ஒருவேளை அந்த துர்க்குணங்களை உன்னால் விட முடியவில்லையென்றால், நீ இந்த கையை பதப் படுத்தி, பங்களாவின் முன் பகுதியில் உன் கண்ணில் தெரியும்படி வைத்துவிடு. இதைப் பார்த்தாவது உன் குணம் மாறும் என்று நான் நம்புகிறேன், இதுவே என் கடைசி வார்த்தை" என்று எழுதியிருந்தார். இதை கண்ட அந்த மணப்பெண் பயந்து அலறினாள். இப்படிப்பட்ட கொலை காரனையா திருமணம் செய்தோம் என்று பயந்து ஓடினாள். அந்த துஷ்டமகன் அந்த இரத்தம் வடிந்த கையை பார்த்து முதன் முறையாக முழங்கால் படியிட்டு தகப்பனே என்று கதறி அழுதான். அந்த அழுகை வெறுமையான அழுகை அல்ல, மனந் திரும்புதலுக்கு ஏதுவான அழுகையே! (2கொரி. 7:10). அவன் மனந்திரும்பினான்! நல்ல மனிதனாக வாழ முடிவெடுத்தான். தகப்பனுடைய முறிக்கப்பட்ட கையை பார்க்கும் பொழுதெல்லாம், அவன் சிறு வயதில், ஞாயிறு பாட வகுப்பில் அறிந்துக்கொண்ட, இயேசுவின் சிலுவை பாடுகள் அவன் கண்களுக்கு முன் தெரிய ஆரம்பித்தது. தன் பாவங்களை விட்டு விலகி உலகிற்கு என்று வாழாமல் தேவனுக்கென்று வாழ்ந்தான். அவன் மனந்திரும்பியதைக் கண்டு மனைவியும் திரும்பி வந்தாள். இருவரும் ஒரு குறிப்பிட்ட நாட்டில் மிஷனரிகளாக தங்களை அர்ப்பணித்தனர். கலாத்தியர் 2:20; 6:14. இது நடந்த ஒரு உண்மை யான சம்பவம்.

## உ. சிலுவையை பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியம், இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலன்!

(1 கொரி 1:18)

மாசற்ற கிறிஸ்து இயேசுவினுடைய சிலுவை அன்பைக் குறித்து, பேதுருவும் யோவானும் பேசும்பொழுது மூவாயிரம் பேர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறார்கள். தொடர்ந்து பலத்த அற்புதங்களும் இயேசுவின் நாமத்தில் நடைபெற்றது. இன்றைக்கும் இந்த சிலுவை அன்பினால் தொடப்பட்ட அநேகர் பெரிய அற்புதங்களையும், வாழ்வில் உயர்வையும் அடைகிறார்கள். **(யோவான் 12:32)** பரிசேயர், வேதபாரகர், சதுசேயரும் கிறிஸ்து இயேசுவை சிலுவையில் அறைவதின் நிமித்தமாக அவரது சரித்திரமும், அவர் செய்த அற்புதங்களும், அவர் கொடுக்கும் நித்திய ஜீவனும் அழிந்து போய்விடும் என்று நினைத்தார்கள். எனினும், கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்த பிறகு **ரோமர் 1:5ன்படி** பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார். இன்றும் 2022 ஆண்டுகள் ஆகியும் அவருடைய சிலுவையின் தியானங்கள் அவரை விசுவாசிக்கிற அனைவருக் குள்ளும் பலத்த கிரியைகளை செய்கிறது, திட நம்பிக்கையை தருகிறது. இப்படிப்பட்டவர்கள் மேல் தேவனுடைய அளவற்ற கிருபை பரிபூரணமாய் பொழியப்படுகிறது. இதன் நிமித்தமாக வியாதிகள் சுகமடைகின்றன. மரித்தோர் எழும்புகிறார்கள். தற்கொலை ஆவிகள், பேய்கள், மந்திர, தந்திர சக்திகள் அழிந்து மக்கள் விடுதலையடைகிறார்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு ஒன்றையும் அப்போஸ்தலனாகிய பவுல் தான் சுற்றிய தேசங்களில் பிரசங்கிக்கவில்லை. **(1 கொரிந்தியர். 2: 2).**

ஆம் எனக்கன்பான தேவ பிள்ளைகளே! **முடிந்தது என்று நினைக்கும் பொழுது கிறிஸ்து இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் நம்முடைய வாழ்க்கையில் பெரிய காரியத்தை கொண்டு வருகிறது.** அதற்காக தேவனை ஸ்தோத்தரிக் கிறேன்! என்னுடைய எல்லா செய்தி களிலும், ஜெபங்களிலும் கர்த்தருடைய சிலுவையின் அன்பை மைய பொருளாக கொண்டு வருவேன். இதன் நிமித்தமாக கர்த்தர் பலத்த அற்புதங்களை செய்கிறார். அதைத் தான் ஒவ்வொரு கூட்டங்களிலும் பார்க்கிறீர்கள். எங்களது சுய சக்தியால் இப்படிப்பட்ட அற்புதங்களை செய்ய முடியாது. சீஷர்களைப் போல மாசற்ற இருதயத்தோடு, அவருடைய சிலுவை மரணத்தை பிரசங்கிக்கும் பொழுது ஜனங்களின்

கண்ணீர் துடைக்கப்படுகிறது. கிறிஸ்து இயேசு சிலுவையில் பட்ட காயங்களே, உங்கள் வாழ்வின் எல்லாவித சோர்விலும், உங்களை ஆற்றி, தேற்றி சந்தோஷமான மறுவாழ்வை உங்களுக்குத் தருகிறது.

**வாலிபன் ஒருவன் ஒரு சமயம் ஆந்திராவில் என்னை சந்தித்தான். அவன் ஊழிய வாஞ்சை உள்ளவன். எப்படியாவது தேவனுடைய வரம் இரட்டிப்பாக கிடைக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். எனவே பலப்பல வேதாகம வியாக்கியான புத்தகங்களை படித்து, செல்லும் இடமெல்லாம் பிரசங்கித்தான். ஆனால் அவன் எதிர்பார்த்த அற்புதங்கள் நடக்கவில்லை. எனவே மிகவும் சோர்ந்து போய் என்னிடத்தில் வந்து ஆலோசனை கேட்டான். அவன் கூறினதை கேட்டு நான் சுருக்கமாக "மகனே! இயேசுவை பற்றியும், சுவிசேஷத்தை பற்றியும் பரிபூரணமாய் பிரசங்கிக்க ஒருவராலும் கூடாது, ஆனால் மிக எளிதான முறையில் சாதுர்ய ஞானமில்லாமல் இயேசுவின் சிலுவை மரணம், பாடுகளை மக்களுக்கு விளங்கு மாறு கூறு. அன்பாக, அமைதியோடு, சாந்தத்தோடு, எவரையும் தாக்காமல் பேசு, அப்பொழுது உன்னுடைய கூட்டங்களிலும் பலத்த அற்புதங்கள் நடக்கும்" என்றேன். நான் கூறினதை கவனமாய் கேட்ட அவன் இயேசுவின் சிலுவை மரணத்தை தன் பிரசங்கத்தில் மைய பொருளாக சொல்லாமல் இருந்ததை நினைத்து வருந்தினான். தன் பிரசங்கத்தை மாற்றினான், என்னைப் போல தேவ சமூகத்தில் காத்திருந்து இயேசுவின் சிலுவை பாடுகள் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு, சுகமளிப்பு இதைக் குறித்து பேச ஆரம்பித்தான். என்ன ஆச்சரியம்! அவனது கூட்டங்களில் இயேசு கிறிஸ்து பலத்த அற்புதங்களை செய்தார். அவன் மூலம் ஓரிரு வருடங்களில் இறந்த 6 பேரை இயேசு எழுப்பினார்.**

**என்னுடைய ஊழிய அனுபவத்திலும் நடந்த ஒரு சம்பவம். நாகர்கோவில் பகுதியில் பாவனா என்னும் தாய் இருக்கிறார்கள். அவர்கள் மகளுக்கு திருமண காரியம் ஒழுங்கானது. கணவர் இல்லாத படியால் தன்னுடைய இரண்டு சகோதரர்களை வீட்டிற்கு வரவழைத்து திருமணப் பத்திரிக்கையை உறவினர்களுக்கு கொடுத்து வரும்படி கூறி அவர்களை அனுப்பினார். அவர்கள் நெடுஞ் சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தப்பொழுது எதிர்பாராதவிதமாக பேருந்து ஒன்று மோதி தூக்கி வீசப்பட்டனர். ஒருவர் மூளை சிதறியும், இன்னொருவருக்கு பலத்த அடிபட்டும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காவல்துறையினர் பார்வையிட்டு இரு சடலங்களையும் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதைக் கேள்விப்பட்ட அந்த தாய் கதறி அழுதாள், இதன் காரணமாக மகள் திருமணம் நின்று விடும் என்ற பயமும், சகோதரர்கள் இறந்து விட்டனரே என்ற கவலையும் அவர்களை மிகுதியும் கலங்கப் பண்ணியது. அப்பொழுது மருத்துவ மனையில் பணியாற்றிய ஒரு பணியாளர் என்னைக் குறித்து கூறி அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர் நிச்சயம் அற்புதம் செய்வார் என்று கூறினார்கள். உடனே இந்த தாய் தொலைப் பேசியில் என்னோடு பேசி தன் நிலைமையை கூறி கண்ணீர் வடித்தார்கள். நான் அவர்களை ஆறுதல் படுத்தி எனக்கு பத்து நிமிடம் அவகாசம் கொடுங்கள். கர்த்தர் தரும் பதிலை உங்களுக்கு சொல்கிறேன் என்று கேட்டுக் கொண்டேன். அதின்படியே தேவ சமூகத்தில் கண்ணீரோடு ஜெபித்து மீண்டும் அவர்களை தொலைப்பேசியில் அழைத்து "கர்த்தர் உங்கள் சகோதரர்களை உயிரோடு எழுப்புவார், கலங்கா தீர்கள்! மகள் திருமணம் எந்த தடையுமின்றி நடக்கும்" என்று கூறினேன். முதலில் அவர்கள் இதை நம்பவில்லை. என்றாலும் நம்பிக்கை இழந்தவர்களாய் மருத்துவமனையில் சடலம் வைத்திருந்த இடத்திற்கு சென்றார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி இவர்களை திடுக்கிட வைத்தது. மரித்த சடலங்கள் இரண்டும் உயிரோடு எழும்பி இருந்தது. அவர்கள் இவர்களை பார்த்து அக்கா, இயேசு எங்களை உயிர்ப்பித்தார் என்று கண்ணீரோடு கூறினார்கள். அங்கிருந்த மருத்துவர்கள், செவிலியர்கள் யாவரும் இயேசுவின் வல்லமையை கண்டு சந்தோஷப்பட்டார்கள். நிச்சயிக்கப்பட்ட படியே மகளின் திருமணம் குறிப் பிட்ட நாளில் நல்லபடியாக நடந்து முடிந்தது. இன்றும் அவர்கள் தேவனுக்கு சாட்சியாக வாழ்கிறார்கள்.**

ஆம் எனக்கன்பான தேவ ஜனமே! நீங்களும் உங்கள் பிரசங்கத்தில் கிறிஸ்து இயேசுவின் சிலுவையின் அன்பு, உயிர்த்தெழுதலின் வல்லமையை பிரசங்கியுங்கள். அப்பொழுது நிச்சயமாக திரளான ஆத்துமாக்களை அறுவடை செய்வீர்கள்.

## 3. கிறிஸ்து இயேசு நமக்காக சிந்தின இரத்தத்தால் நாம் தேவனிடத்தில் சமாதானம் பெற்றோம்! நீதிமான்களாக மாற்றப்படுகிறோம்.

(ரோமர் 4:25, 5:1)

கிருபையினாலும், விசுவாசத்தினாலும் நாம் அனைவரும் இரட்சிக்கப்பட்டோம். அதே நேரத்தில்

இயேசுகிறிஸ்துவின் சிலுவை அன்பை நினைத்து, அவரது பாடுகளை தியானிக்கும் பொழுது கர்த்தருடைய அளவற்ற பிரசன்னம் நம்மை நிரப்புகிறது. பரலோகம் நாம் இருக்கும் இடத்திற்கு இறங்குகிறது. இது ஆழ்ந்த மறைக்கப்பட்ட இரகசியம். நம்முடைய இல்லத்திற்கு கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்புகிறார். சிறகில்லாத தூதர்கள் அனுப்பப்படுகிறார்கள். சில நேரங்களில் இயேசுவே நம்மிடம் வருகிறார். தேவ ஆட்டுக்குட்டியாக இருக்கிற இயேசுவின் இரத்தம் நம்மை கழுவுவது மாத்திரமல்ல, நம்மை ராஜாக்களும், ஆசாரியர் களுமாக மாற்றுகிறது.

சாதாரண ஒரு எளிய வாழ்க்கை வாழுகிற, நொறுங்குண்ட, பணிந்த தம்முடைய மக்களுக்கு அவர் காட்சியளிப்பது எவ்வளவு ஆனந்தம். எனவே தான் ஜெபத்தை முடிக்கும் பொழுது இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம் பிதாவே என்று கூறுகிறோம். கிறிஸ்து இயேசுவே நமக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுகிறவராக இருக்கிறார். ஆதாமும், ஏவாளும் இழந்த மகிமையான தேவ பிரசன்னம் நம் உள்ளத்தில் நிரப்பப்படுகிறது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்! எனது பேரன் ஜோனத்தன் மோசஸ் நீலநிற பேபியாக பிறந்து, செயலற்றவனாக இருந்தப் பொழுது நான் வெளிநாட்டில் இருந்தேன். என்னை ஜெபம் செய்யும்படி என் மனைவி கேட்டுக் கொண்டார். உடனே ஜெபித்தேன். பரலோகத்திலிருந்து வரும் பதிலை எதிர்பார்த்தேன். சிறிது நேரத்தில் என் ஜெபம் பரலோகத்திற்கு சென்றதா இல்லையா என்பதை நினைத்து அழ ஆரம்பித்தேன். ஏனென்றால் என் பேரன் இப்படி இருப்பது பெற்றோருக்கு எப்படி இருக்கும், தாத்தா பாட்டியாகிய எங்களுக்கு எப்படி இருக்கும், சிந்தித்து பாருங்கள். இந்த இக்கட்டான நேரத்தில் தான் நான் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்யும் பொழுது கர்த்தருடைய ஆவியானவர் என்னை வேறு மாதிரி ஜெபிக்கும்படி ஏவினார். கர்த்தர் கொடுத்தார்! கர்த்தர் எடுத்தார்! கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று கூறினேன். அச்சமயத்தில் மகிமையுள்ள சிறகில்லாத ஒரு தூதன் இறங்கி வந்தான். அவன் என்னை நோக்கி **"தேவ தாசனே! இவ்வளவு துயரமான நேரத்தில், பரலோக பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கின்ற இயேசு கிறிஸ்து என்ன சொல்கிறார் என்று கேட்க வேண்டும் என்றால் அவரது சிலுவையின் பாடுகளை முதலாவது நினைவு கூறுங்கள், அப்பொழுது பரலோகம் திறக்கப்படும்"** என்று கூறினான். வழக்கம் போல அவருடைய பாடு, மரணத்தை நினைத்து அழுதாலும், இன்னொரு பக்கம் அவரது உயிர்த்தெழுதலை அறிக்கை செய்து ஜெபித்தேன். என்ன ஆச்சரியம்! பரலோகம் திறந்தது. கோடிக்கணக்கான இறந்துபோன குழந்தைகள், சிறகில்லாத தூதர்களாக காட்சியளித்தார்கள். அவர்கள் மத்தியில் இருந்த ஜோனத்தனின் ஆத்துமா இயேசுவின் கரங்களில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது இயேசு என்னை திரும்பி பார்த்து "மகனே கலங்காதே! இந்த குழந்தை என் வருகைக்கு முன்னால் மிக வல்லமையாக பயன்படுத்தப்போகிற பாத்திரமாக திகழுவான். இப்பொழுது அவன் ஆத்துமா பரலோகத்திற்கு வந்தாலும் நான் அதை திருப்பி அனுப்புகிறேன். அவனுக்கு மோசஸ் என பெயரிடு என்று, மிகுந்த ஆறுதலோடு, சமாதானத் தோடு கூறினார். பிரசவ வார்டில் இருந்த குழந்தையை பார்த்து மோசஸ் என்று அழைக்கும்படி என் மனைவி யிடம் கூறினேன். அப்படியே அவர்கள் அழைத்தார்கள். எவ்வளவு பெரிய ஆச்சரியம்! அவன் மீண்டும் உயிர் பெற்றான். இன்று நீங்கள் அறிந்தபடி கர்த்தருடைய ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தப்படுகின்றான்.

ஆம் எனக்கன்பானவர்களே! பரலோகத்தில் என்ன தீர்மானிக்கப்படுகிறது என்று நமக்கு தெரிய வேண்டும் என்றால், அவர் நம்மோடு வாசம் பண்ண வேண்டும் என்றால் அவரது பாடு, மரணம், உயிர்த் தெழுதலை நினைவு கூற வேண்டும். அதனால் நீங்கள் பயனடைவது மாத்திரமல்ல, உங்களால் மற்றவர் களும் பயனடைவார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

## 4. கிறிஸ்து இயேசு மரித்து உயிர்த்தெழுந்தபடியால் பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட்டது

(1 யோவான் 3:8)

இன்றைக்கு நாம் வாழும் உலகில் பயங்கர மான பிசாசும், அவனுடைய தூதர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய பெரிய அற்புதங்களை செய்கிறான். இதை நம்பி அழைக்கப்பட்ட அநேகர் பின்மாற்றம் அடைவதை நாம் காண்கிறோம். **(மத்தேயு 24: 24)** ஆனால் என் அன்பு தேவ பிள்ளைகளே! திடன் கொள்ளுங்கள்! மரண பயம் உங்களை ஆட்கொள்ளும் பொழுது இயேசுவின் உயிர்த்தெழுதலை நினைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது மரண பயம் உங்களை விட்டு ஓடிப்போகும். தம்முடைய சிலுவையின் மரணத்தால் இயேசு மரணத்திற்கு அதிகாரியான பிசாசின் தலையை ஆயிரம் துண்டுகளாக சிதைத்தார். உங்கள் சரீரம் மரித்தாலும், அழிந்து போனாலும், உங்கள் ஆத்துமா இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரலோக வாசல்கள் திறக்கப்பட்டு

அங்கே சென்று ஆனந்தமாக, சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணும். அதுவுமல்லாமல் கர்த்தர் இயேசு நியாயத்தீர்ப்பு நாளில் வரும்பொழுது மண்ணான, மரித்துப் போன, ஒன்றுக்கும் உதவாக சரீரம் மகிமையின் சரீரமாக மாறும். எவ்வளவு பெரிய சந்தோஷம் பாருங்கள். மரணம் என்பது கிறிஸ்தவர் களுக்கு ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்திற்கு செல்வது போலாகும். எனவே, உண்மை கிறிஸ்தவர் களாகிய நீங்கள் மரணத்தை குறித்து கலங்காதீர்கள்! மரணம் என்பது சரீரத்தில் மரிப்பது, ஆத்துமாவில் அல்ல. அதற்குப் பதிலாக கர்த்தருடைய உயிர்த் தெழுந்த வல்லமை காணப்பட்டு நம்முடைய மரண பயம் எல்லாம் நீங்கி, நாம் பரலோக வாசலை வந்தடைகிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மரணத்தின் கூர் உடைந்து போனது! பாதாளத்தின் வல்லமை நொறுக்கப்பட்டது. அவருடைய உயிர்த் தெழுந்த வல்லமையினால் நம்முடைய பாவமான சரீரம், மகிமையான மறுரூபமான சரீரமாக மாற்றப் படுகிறது.

**அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந் தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப் பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங் களையும் உயிர்ப்பிப்பார் - ரோமர் 8 : 11**

கர்த்தர் இயேசு நமக்காக மரித்து உயிர்த் தெழுந்தது போல நாமும் நிச்சயமாக அவர் வருகைக்கு முன் மரிப்போம் என்றால் இதே விதமாய் உன்னதமான நிலையை அடைவோம். எனவே தைரியமாக எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் கர்த்தருடைய கிரியைகளில் நாம் பெருகுவோமாக! **ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிரா தென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (1 கொரி. 15:58)** அவர் உங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக மகிமைப்படுத்துவார்.

**நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர் களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்**

**- வெளி. 1: 6 (வெளி. 5: 9,10)**

இந்த செய்தி உங்களுக்கு மிகுந்த பிரயோஜன மாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன். எங்கள் சமூக வலைதளங்களில் வருகிற எல்லா நிகழ்ச்சி களையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து பார்த்து பயனடையும்படி உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

கர்த்தருக்கு ஊழியம் செய்வதை நாம் ஒரு போதும் விட்டுவிடாமல் இருப்போம். மெய்யாகவே கர்த்தர் உயிர்த்தெழுந்தார், அல்லேலூயா! ஆமென்!

**Yes my dear children of God**
**Indeed the Lord Jesus has risen**


# உடனடி தேவை

* Adobe Premiere Pro–வில் எடிட்டிங் செய்யத்தெரிந்த Video Editors.
* வேதாகமம் தெரிந்த, பட்டப்படிப்பு முடித்த ஆங்கிலம் & தமிழ் தட்டச்சு பயின்றவர்கள்.
* பட்டப்படிப்பு முடித்த கம்ப்யூட்டர் நன்கு தெரிந்த Data Entry Operators
* அனுபவமுள்ள ஓட்டுனர்கள் (SUV)
* சமையல் செய்பவர்கள்
* தூய்மைப் பணியாளர் (பெண்கள் மட்டும்)




கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தகுந்த ஊதியம் வழங்கப்படும்

Apply to: info@mojindia.org

நேரிலோ அல்லது E.Mail மூலமாகவோ உங்களுடைய Resume & Certificate Copy – ஐ அனுப்பி வைக்கவும்

# உலகச் செய்திகள்

**வேலை தேடுவோருக்கான மிகவும் பிரயோஜனமுள்ள வலைதளங்களில் சில வெளியிட்டுள்ளோம்.**



கடந்த கொரோனா காலங்களில் எத்தனையோ பேர் தங்கள் வேலையை இழந்துள்ளனர். நாங்கள் இங்கே வெளியிட்டுள்ள இந்த சமூக வலைதளங்களில் உங்கள் தகுதிக்கேற்ற வேலையைத் தெரிந்து கொள்ளுங்கள்.! உங்கள் வாழ்க்கையில் உயருங்கள்!

## Top 20 Job Search Sites in India

01 Naukri.com
02 Monster India
03 TimesJobs
04 Freshersworld
05 LinkedIn
06 Glassdoor
07 Shine.com
08 Jooble
09 Indeed.com
10 Placement India
11 Click.in
12 Jobsarkari.com
13 Upwork
14 Jobrapido.com
15 Freelancer.com
16 JobsDB
17 Quikr.com
18 Fresherslive.com
19 Indgovtjobs.in
20 Hirist

# நிறைவேறும் தீர்க்கதரிசனங்கள் !



ஐக்கிய நாடுகளின் சார்பில், மிகவும் பிரபலமான நியூயார்க் மாநகரத்தில் கட்டப்பட்ட, மிகப்பெரிய கட்டிடத்திற்கு முன்பாக மெக்ஸிகோ நாட்டை சார்ந்த **Govt of Oaxaca** ஒரு விநோதமான, ஆனால் கடைசி காலத்தில் சத்திய வேதத்தில் குறிப்பிட்ட தீர்க்கதரிசனத்தின்படி சிலை ஒன்றை அமைத்துள்ளது. அந்த சிலையானது மிகவும் பெரிதாகவும், கழுகின் சிறகுகளைப் போன்ற இரண்டு மிகப்பெரிய சிறகுகளை உடையதாகவும், சிறுத்தையைவிட அதிக பயங்கரமான பெரிதான தோற்றம் உடைய **Jaguar** என்கிற மிருகத்தின் சிலை போல உள்ளது. இந்த மாபெரும் சிலையை பார்ப்பவர்கள் எல்லோரும் பயந்து நடுங்கும் அளவிற்கு அந்த சிலை தோற்றமளிக்கிறது. சிறுத்தையும், புலியும் கலந்த முகமாகவும், பற்கள் சிங்கத்தை போலவும், கால்கள், நகங்கள் கரடியை போலவும் அதின் வால் பாம்பைப் போலவும் அமைந்துள்ளது. இதைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் கடைசி காலத்தில் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான மிருகத்திற்கு, பிசாசு தன் அதிகாரத்தை கொடுப்பான் என்று எழுதப்பட்டுள்ளது. **கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தானியேல் இதைக் குறித்து எழுதியிருக்கிறான் (தானி. 7:2-4) சீஷன் யோவானும் இதைக்குறித்து எழுதியிருக்கிறான் (வெளி. 7:2)**

இந்த சிலைக்கு நியூயார்க் மாநகரத்திலுள்ள ஐக்கிய நாடுகளின் குழு கொடுக்கும் விளக்கம் **Peace and Security** அதாவது சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்று சொல்கிறார்கள். எனினும் **அப்போஸ்தலனாகிய பவுல் சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும் என்று தெளிவாக கூறுகின்றார். (1 தெச. 5:3)** 2016ம் ஆண்டு இதே நியூயார்க் கட்டிடத்தில் பாகாலுக்கு என்று மிகப்பெரிய சிலைவழிபாட்டு ஆராதனை கூடம் ஒன்றும் கட்டப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அந்திகிறிஸ்துவையும், பிசாசையும் வணங்குகிற ஆலயங்களும் உலகில் பெருகி வருவதை நாம் பார்க்கிறோம். பிசாசை வணங்க செல்லும் ஜனங்கள் தங்கள் சரீரங்களில் பல பகுதிகளை கத்தியால் குத்தியும், தங்கள் உடைகளை அரைநிர்வாணம் அல்லது நிர்வாணமாகவும் கிழித்து விடுவார்கள். என்னதான் ஐக்கியநாடு இந்த சிலையை சமாதானம், பாதுகாப்பு என்று சொன்னாலும், 2500 ஆண்டுகளுக்கு முன் தானியேல் என்னும் தீர்க்கதரிசி சொன்ன வார்த்தை இப்பொழுது நிறைவேறுவதை பார்க்கிறோம்.

எனவே, இந்த மிருகத்தின் சிலையை என்று வைத்தார்களோ அன்றிலிருந்து உலகத்தின் முடிவு நெருங்குகிறது என்பதை நாம் அறிய வேண்டும். இந்த சிலையை அநேக ஜனங்கள் வணங்க ஆரம்பித்துள்ளார்கள்.

# Praise Report - துதி அறிக்கை

என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன் – சங்கீதம் 66:14

## பொருத்தனை ஜெபத்திற்கு பதில் தந்த தேவன்

எனது மகனுக்கு 46 வயதாகிறது. அவனுக்கு சர்க்கரை வியாதி இருக்கிறது. பரிசோதனை செய்த பொழுது சிறுநீரில் உள்ள சர்க்கரை அளவு 4+Protein. அந்த நேரத்தில் அன்பரின் ஊழியம் பத்திரிக்கையில் எழுதியிருந்த அநேக சாட்சிகளை படித்தேன். கர்த்தர் மேல் உள்ள விசுவாசம் எனக்கு அதிகரித்தது. மகனுக்கு சுகம் கிடைக்க வேண்டி பொருத்தனை செய்து ஒரு மாதம் முழுவதும் கண்ணீரோடு ஜெபித்தேன். ஒரு மாதத்திற்கு பிறகு பரிசோதனை செய்தோம். சுகர் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. மருத்துவருக்கே இது ஆச்சரியத்தை தந்தது. பொருத்தனை ஜெபத்தை கேட்டு தேவன் தாமே என் மகனுக்கு அற்புத சுகத்தை கொடுத்தார். சுகத்தை தந்த தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம் என் பொருத்தனை காணிக்கையை **"அன்பரின் ஊழியத்திற்கு"** அனுப்பியுள்ளேன்.

**- திருமதி. ராஜம்மாள் சந்திரன், மைசூர்.**

## தீராத குடல் இறக்கம் வியாதியிலிருந்து அற்புத சுகம் தந்த தேவன்

எனக்கு தாங்க முடியாத வயிற்று வலியும், குடல் இறக்கம் பிரச்சனையும் இருந்தது. இதனால் அதிக கஷ்டங்களை அனுபவித்து வந்தேன். சிகிச்சைக்காக மருத்துவரிடம் சென்றப்பொழுது, இந்த பிரச்சனைக்கு அறுவை சிகிச்சை மட்டுமே தீர்வு என்று கூறினார். எனக்கோ பயம் வந்து



விட்டது. காரணம் எனக்கு வீசிங் பிரச்சனையும் இருந்தது, அதனால் கடுமையான இருமலும், தும்மலும் என்னை வருத்திக் கொண்டிருந்தது. வயிறு நிறைய சாப்பிடவும் முடியாது. வயிற்று பகுதியை எப்பொழுதும் பெல்ட் கொண்டு இறுக கட்டியிருப்பேன்.

இந்நிலையில் திருநெல்வேலி கூட்டத்தில் கலந்துகொண்டேன். **ஜெப வேளையில் பிணியாளிகளுக்காக சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது வியாதியோடு வந்திருப்பவர்கள், வியாதி உள்ள இடத்தில் கரங்களை வையுங்கள், கர்த்தர் சுகம் தருகிறார் என்று ஜெபம் செய்தார்கள். நானும் என் வயிற்றில் கை வைத்து "கர்த்தாவே இந்த வலியில் இருந்து எனக்கு சுகம் தாரும்" என்று ஜெபித்தேன். ஜெபித்த அந்த நேரத்தில் என் வயிற்றின் தொப்புள் பகுதிக்கு மேல் ஐஸ் வைத்தது போல ஒரு குளிர்ச்சி ஏற்பட்டது. உடனே அதில் இருந்து ஒரு கட்டி விலகிப் போனதை உணர்ந்தேன். அந்த நொடியே எனக்கிருந்த தீராத வயிற்றுவலி மறைந்து போனது. சுகம் கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.**

**திரு.கு.கணேசன், களக்காடு, திருநெல்வேலி**

## வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாய் செய்த தேவன்

எனது பெயர் சுஜாதா. என்னுடைய இரண்டு பிள்ளைகளுடைய பெயர் திவ்யா மற்றும் தீட்தி.

நாங்கள் டெல்லியில் வசித்து வருகின்றோம். **சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களின் ஜெபத்தினால் **டெல்லியில் நல்லதொரு மத்திய அரசாங்க வேலையை கர்த்தர் கொடுத்தார். அதில் எனக்கு நல்ல பெயரையும், உயர்வையும் கட்டளையிட்டார். நான் ஒய்வுபெற்ற பிறகும் என்னுடைய பணியை தொடர தேவன் தாமே உதவி செய்தார்.** அதுமாத்திரமல்ல, என் மகள் திவ்யாவிற்கு நல்ல கம்பெனியில் வேலை கிடைத்தது. நாங்கள் **Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்த நாளிலிருந்து சகோதரனுடைய ஜெபத்தினால், தேவனின் விசேஷித்த கிருபை எங்களை எல்லா சூழ்நிலையிலும் தாங்கினது. கர்த்தர் எங்கள் வாழ்க்கையில் பெரிய அற்புதங்களை செய்தார்.** அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். கர்த்தர் செய்த நன்மைகளை மறவாமல் அன்பரின் ஊழியப் பணிகளுக்கும், SJ Saves Trust அறப்பணிகளையும் மனதார தாங்குகிறோம். மேலும் **எனது மகளின் முதல் மாத சம்பளத்தையும் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.**

**- திருமதி. சுஜாதா, புதுடெல்லி**

## இருதயத்தின் வேண்டுதல்களை அருளிய தேவன்

நான் அன்பரின் ஊழிய பங்காளர். சகோதரர் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களின் ஜெபத்தின் மூலம் கர்த்தர் எங்கள் குடும்பத்திற்கு அநேக நன்மையான காரியங்களை செய்துள்ளார். **என் கழுத்து பகுதியைச் சுற்றிலும் ஏராளமான கட்டிகள் இருந்தது. இதற்காக சகோதரர் ஜெபித்த பொழுது, இயேசு காட்சியளித்து அற்புதமாய் என்னை சுகமாக்கினார்.** என் பிள்ளைகளுக்கு நல்ல கல்லூரியில் படிப்பதற்கான இடம் கிடைத்தது. மூத்தமகளும், இளைய மகளும் நல்ல முறையில் படித்து முடிக்க தேவன் கிருபை செய்தார். பல நாட்களாக என் மூத்த மகளுக்கு வேலையில்லாமல் இருந்தது. சகோதரன் ஜெபத்தால் நல்ல வேலை கிடைத்தது. அதுமாத்திரமல்ல, **வீடு இல்லாமல் தவித்த எங்களுக்கு கர்த்தர் ஒரு அழகான வீட்டை கொடுத்தார்.** கர்த்தர் செய்த நன்மைகளை மறவாமல் அன்பரின் ஊழியத்தை எங்களால் இயன்ற அளவு தாங்கி வருகின்றோம்.

**- திருமதி. நிர்மலகுமாரி, பிரகாசம் மாவட்டம், ஆந்திரா**

## சகல காரியங்களிலும் உதவி செய்கிற தேவன்



நான் பன்னிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் நாட்களிலிருந்தே சகோதரர் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை நன்கு அறிவேன். என் பெற்றோர் சகோதரரை நேசித்து அவர்கள் கூட்டங்களுக்கு தவறாமல் செல்வார்கள். ஒரு சமயம் சகோதரர் அவர்கள் எனக்காக ஜெபித்தபொழுது **"நீ BDS, MDS முடிக்க கர்த்தர் கிருபை செய்வார்"** என்று கூறினார்கள். அவர்கள் கூறினபடியே நான் படித்தும் முடித்தேன். எனக்கென்று ஒரு கிளினிக்-ஐ ஆரம்பித்தேன். தேவனுக்கு பயந்த BDS படித்த ஒரு பெண்ணை திருமணம் செய்ய தேவன் எனக்கு தயை செய்தார். எனினும் எங்கள் இருவருக்கும் பல ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் இருந்தது. நாங்கள் எத்தனையோ மாடர்ன் டெக்னாலஜியை பயன்படுத்தியும் எங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. மிகவும் சோர்ந்து போய் கண்ணீர் வடித்தோம். IVF இரண்டு முறை செய்தும் பிரயோஜனம் இல்லை. இந்த நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து நிலைமையை கூறினோம். சகோதரர் எங்களுக்காக ஜெபித்து **நீங்கள் மருத்துவம் பார்த்தது போதும், குழந்தைகளை**

**உருவாக்குவது நம்முடைய தேவன் (ஏசாயா 66: 9) அடிக்கடி மருத்துவம் பார்த்து உங்கள் சரீரத்தை கெடுத்துக் கொள்ளவேண்டாம். இதற்காக எடுக்கும் சிகிச்சை மிகவும் வேதனை உள்ளது. இந்த காரியத்தை கர்த்தரிடத்தில் விட்டு விடுங்கள்"** என்று கூறினார். அவர்கள் கூறினபடியே கர்த்தருடைய கரங்களில் எங்களை ஒப்புக் கொடுத்தோம். அதன்பிறகு கர்த்தர் எங்கள் வாழ்வில் அற்புதம் செய்தார். **ஆறு வருடங்களுக்கு பிறகு என் மனைவி அழகிய பெண் குழந்தையை பெற்றெடுக்க சர்வ வல்லமையுள்ள தேவன் இரக்கம் பாராட்டினார்.** தேவனுக்கே மகிமை!

- Dr. Godwin, Marthandam

## தலையின் உள்பகுதியிலிருந்த கட்டி மறைந்த அதிசயம்



எனக்கு பல மாதங்களாக தலைவலி இருந்துகொண்டே இருந்தது. மருத்துவரை அணுகி சிகிச்சை எடுத்தேன். அவர்கள் பரிசோதனை செய்து தலையில் கட்டி இருக்கிறது. அதனால் தலைவலி வருகிறது, அறுவை சிகிச்சை செய்தால் தான் இது குணப்படுத்த முடியும் என்று கூறிவிட்டார். இதைக் கேட்டவுடன் மிகவும் அதிர்ச்சி அடைந்து மனம் சோர்ந்து போனேன். **அந்த நேரத்தில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் கூட்டம் ஈரோட்டில் நடைபெறுவதை அறிந்து நம்பிக்கையுடன், அதிகமான தலைவலியுடன் கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். கூட்ட முடிவில் சகோதரர் எனக்காக மனதுருக்கத் தோடு ஜெபித்தார்கள். அதன்பிறகு மீண்டும் மருத்துவரை அணுகி, பரிசோதனை செய்த பொழுது தலையில் கட்டி ஏதும் இல்லை என்றார்கள். தலைவலியும் என்னைவிட்டு நீங்கியது.** சொல்லொண்ணா வேதனையில் இருந்த என்னை அன்பின் தேவன் கண்ணோக்கி பார்த்து அற்புத சுகத்தை தந்தார். அவருடைய நாமத்தை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன்.

- திருமதி. காமாட்சி, ஈரோடு

## என் கணவருக்கு ஜீவனைத் தந்த வல்லமையின் தேவன்!



என் கணவருக்கு 2020ஆம் ஆண்டு கொரோனா நோய் வந்தது. மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டார். மருத்துவமனையில் சேர்த்தப் பொழுது நுரையீரலில் பரவி விட்டதாகவும், நுரையீரலை அரித்து விட்டதாகவும், இனி உயிர் பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் கூறினார்கள். எனது கணவர் நான்கு இரவு, நான்கு பகல் தூங்கவில்லை. சரீரம் மிகவும் மெலிந்து போய் விட்டது. தண்ணீர் கூட வாயில் இறங்காது. அவரால் நடக்கமுடியாது, சாப்பிட முடியாது. இதனால் எனது கணவரை நினைத்து மிகவும் கண்ணீர் வடித்தேன். மருத்துவமனை யிலிருந்து வீட்டிற்கு வந்து என்ன செய்வ தென்று தெரியாமல் பதட்டத்துடன் காணப்பட்டோம். இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தைத் தொடர்பு கொண்டோம். அப்பொழுது Dr. **ஜேன் ஜாஷ்வா** அவர்கள் தொலைப்பேசியை எடுத்தார்கள். கனிவுடன் எங்கள் ஜெப விண்ணப்பத்தைக் கேட்டு, என் கணவரின் ஆரோக்கியத்திற்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். **ஜெபிக்கும் பொழுதே மரணத்தின் கட்டுகள் முறிக்கப்பட்டதை உணர்ந்தேன். கர்த்தர் உங்கள் கணவருக்கு சுகத்தை தருவார் என்று கூறினார்கள். மெய்யான தேவன் ஜெபத்தைகேட்டார். நடக்க முடியாத, தண்ணீர் குடிக்கமுடியாத நிலை யிலிருந்த எனது கணவர் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தார், உணவு சாப்பிட்டார், தண்ணீர் குடித்தார். மருத்துவர்களே இதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். 10 நாளில்**

**மீண்டும் வேலைக்குசெல்லும்படி சர்வ வல்லமையுள்ள தேவன் அற்புதம் செய்தார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம். பாரத்துடன் ஜெபித்த சகோதரி அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.**

**- திருமதி. ஜோதிமேரி, ஈரோடு**

## பரிகாரியாகிய கர்த்தர் கொடிய மஞ்சள் காமாலையை குணமாக்கி, வறுமையை நீக்கி, தொடர்ந்து செய்த நன்மைகள் பல



2016ஆம் ஆண்டு எனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டேன். குடும்பத்திலும் வறுமை தலைவிரித்தாடியது. நல்ல உணவு கூட எங்களுக்கு இல்லை. நான் கூலி வேலை தான் செய்கிறேன். இந்த வியாதியால் கூலி வேலைக்கும் என்னால் போக முடியவில்லை. இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டம் ஈரோட்டில் நடைபெறுவதை அறிந்து கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். **கூட்ட முடிவில் சகோதரர் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபிக்கும் பொழுது தேவ வல்லமையினால் நிரப்பப்பட்டேன். அந்த நேரமே மஞ்சள் காமாலை என்னை விட்டு விலகியது. ஒரு சில நாளில் பரிபூரண சுகம் பெற்றேன்.** அதுமாத்திரமல்ல, நானும் வேலைக்கு செல்ல ஆரம்பித்தேன். எங்கள் குடும்பத்தின் வறுமை நிலைமாறியது. பிள்ளைகளும் நன்றாக படித்தார்கள். எனது ஒரு மகளுக்கு கோயம்புத்தூர் சட்டக்கல்லூரியில் எந்தவித சிபாரிசும் இன்றி, பணச் செலவுமின்றி இடம் கிடைத்தது. பொதுவாக இதுபோன்ற கல்லூரியில் வசதி படைத்தவர்கள் மாத்திரமே படிக்க முடியும். ஆனால் தேவன் அற்புதமாக இடம் கிடைக்கவும், படிப்பை நல்ல படியாக முடிக்கவும், நல்ல வேலை மகளுக்கு கிடைக்கும் படியும் கர்த்தர் அற்புதம் செய்தார். இப்பொழுது மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கின்றோம். எங்களை ஆசீர்வதித்து முன்னேற்றம் அடையச் செய்த தேவனை மறக்காமல், அன்பரின் ஊழியப் பணிகளுக்கு எங்களால் முடிந்த அளவு காணிக்கைகளை கொடுத்து தாங்கி வருகின்றோம். கர்த்தரை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை என்பதற்கு நானே சாட்சி. எங்களை ஆசீர்வதித்த தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்!

**- திருமதி. தமிழ்செல்வி, ஈரோடு**

## சுகர் வியாதியிலிருந்து அற்புத சுகம்



எனது கணவருக்கு சுகர் அளவு 500-க்கு மேல் அதிகமாகி மிகவும் கஷ்டப்பட்டார். கணவர் படும் வேதனையை என்னால் தாங்க முடியவில்லை. மருந்துகள் சாப்பிட்டும் ஒரு முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது. இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை தோறும் நடைபெறும் கூட்டத்தைக் குறித்து அறிந்து, என் கணவரை அழைத்து வந்தேன். அங்கு கூட்ட முடிவில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனது கணவருக்காக ஜெபித்தார்கள். ஜெபத்தை கேட்ட அன்பின் தேவன் சுகர் அளவு நார்மலாகும்படி அற்புதம் செய்தார். இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. ஜெயசுதா, ஈரோடு**

**Telugu Whats App No: 91770 87860**

## முன் அட்டை சாட்சியின் தொடர்ச்சி



என்று கூறினார். அவர்கள் சொன்னபடியே காத்திருந்தோம். கூட்டத் திற்கு வந்திருந்த ஒவ்வொரு வருக்காகவும் தனி ஜெபம் ஏறெடுத்தார் கள். அநேக அற்புதங்கள் அந்த கூட்டத்தில் நடந்த தை கண்கூடாக பார்த்தோம். பிறகு எங்களை அழைத்து **"நீங்கள் இவ்வளவு நேரம் காத்திருந்தபடியால் கர்த்தர் உங்களுக்கு பெரிய காரியத்தை செய்வார்"** என்றார்கள். **"உங்கள் குழந்தையின் சிறுநீரகத்தை புதிய தாக மாற்றி புது ஜீவனை கர்த்தர் தருவார்"** என்று தீர்க்கதரிசனமாக கூறி ஒரு சிறு ஜெபம் மாத்திரம் செய்து, **"மகனுக்கு லாசரு என்று பெயர் வையுங்கள். என் வாழ்க்கையிலும் எனக்கு புது சிறுநீரகத்தைக் கொடுத்த கர்த்தர் தாமே உங்கள் மகனுக்கும் ஒருஅதிசயம் செய்வார்"** என்று கூறினார்கள். எங்களுக்குள் ஒரு நம்பிக்கை பிறந்தது. அன்று இரவே மகனின் சரீரத்திலிருந்த



சுகம் பெற்ற லாசர்

நீர் முழுவதும் வெளியேறியது. எங்களுக்கு இது மிகுந்த ஆச்சரியத்தை தந்தது. விடிந்து பார்த்தால் சரீரம் நார்மலாக இருந்தது. இந்த அற்புதம் மகனின் நான்கு வயதில் நடந்தது. இன்று மகனுக்கு 24 வயதாகிறது. இன்றும் நலமுடன் மகன் இருக்கின்றான். இந்த சாட்சியை சொல்ல வேண்டும் என பலமுறை முயற்சி செய்தோம். ஆனால் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. சகோதரர் ஈரோடு வருவதை அறிந்து இந்த சாட்சியை தேவ நாமம் மகிமைக்காக சொல்ல வேண்டுமென மிகுந்த வாஞ்சையுடன் வந்து இதை சொல்வதில் அதிக மகிழ்ச்சியடைகிறோம். கர்த்தருக்கே மகிமை!

**- திருமதி. சுகந்தி, ஈரோடு**


## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST tv
சனி இரவு 07.30 – 08.00



dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

# தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நடைபெற்ற அப்போஸ்தல தீர்க்கதரிசன பயிற்சி முகாம் ஒரு பார்வை!





கடந்த ஆண்டு உங்கள் சகோதரனாகிய நான் சரீரத்தில் மிகவும் பலவீனப்பட்டிருந்த பொழுது இயேசு தாமே காட்சியளித்து என்னை குணமாக்கினார். அந்த சமயத்தில் சர்வ வல்லமையுள்ள தேவன் ஒரு முக்கியமான காரியத்தை செய்யும்படி என்னை பணித்தார். இயேசு தாம் சீக்கிரமாய் வரப் போவதைக் குறித்தும், இரகசிய வருகை நடைபெறப் போவதை குறித்தும், விளக்கமாக சொல்லி இந்த கடைசி காலத்தில் என் தாசனாகிய நீ அற்புத வல்லமை முகாம்களில் பல இடங்களில் பேசு! அதற்கான வழி வாசலை நான் திறப்பேன் என்று கூறினார். இந்த முகாமில் என்னுடைய மரணத்தில் ஏற்பட்ட அனுபவங்கள், சர்வவல்லமையுள்ள தேவனுடைய மாட்சிமை, பரலோக மகிமை, கர்த்தருக்கு ஊழியம் செய்யும் தூதர்களைப் பற்றி விசேஷமாய் கூறுகிறேன். பிசாசையும், அவன் தூதர்களையும் எப்படி எதிர் கொள்வது, அவனை எப்படி ஜெயிப்பது என்பதையும் கூறுகிறேன்.

- **பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம், வரங்களைக் குறித்த காரியங்கள்**
- **பரலோக தரிசனங்களை பெற்று, தீர்க்க தரிசனம் சொல்வது எப்படி?**
- **அப்போஸ்தலர் காலத்தில் நடைபெற்ற அற்புதங் களை கொண்டு வருவது எப்படி?**
- **சபைகளில் எழுப்புதல், விசுவாசிகளின் விசுவாசத்தை அதிகரிக்க செய்வது எப்படி?**

இதுவரைக்கும் அறிந்திராத பரலோக இரகசியங்கள் அனைத்தும் இந்த முகாமில் சொல்லி கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே இதுபோன்று எழுபதுக்கும் மேற்பட்ட முகாம்கள் உலகம் முழுவதும் நடைபெற்றுள்ளது. கொரோனா நிமித்தம் அவைகள் நிறுத்தப்பட்டது. மீண்டும் கர்த்தருடைய ஏவுதலின்படி திறந்த வாசல் உண்டானது. அதின்படி நாகர்கோவிலில் வல்லமை முகாம் சகோ.ரெய்மண்ட், சகோ.ஜெரால்டு ஆகிய இருவரும் ஒழுங்கு செய்து பொறுப்பேற்று கொண்டார்கள். ஐதராபாத்தில் Mahanaim Full Gospel Church of God சபை தலைமை போதகர் Rev.John Babu அவர்களும் அவருடைய அன்பு மகன் Pr. Jonathan அவர்களும் கூட்டத்தின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு நடத்தினார்கள். இதில் அநேக பாஸ்டர்ஸ் மற்றும் விசுவாச பெருமக்கள் கலந்துக்கொண்டனர். 12 மணிநேரம் மெய்மறந்து கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து தேவ சத்தத்தைகேட்டு, புதிய அபிஷேகத்தால் நிரப்பப் பட்டு, கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்ப வேண்டும் என்று தீர்மானம் எடுத்தார்கள். அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். இம்முகாமில் கலந்து கொள்ள வந்த அனைவரும் கர்த்தருக்காக பிரகாசிக்க வேண்டும் என்ற ஆவலுடன் திரும்பினார்கள். மெய்யாகவே இவர்களை கர்த்தர் வல்லமையாக பயன்படுத்துகிறார். இம்முகாமில் சிலருக்கு இயேசு தாமே காட்சியளித்து அவர்களுடன் பேசி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. கடைசி காலத்தில் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களும்கூட, விசுவாச துரோகம் செய்யும் அளவிற்கு, சாத்தானின் தந்திரங்கள்

பலரை வஞ்சித்து வருகிறது. இவை எல்லாவற்றுக்கும் எதிராக நின்று தேவனுடைய வல்லமையோடு நானும் என் குடும்பத்தாரும் போராடுகிறோம். எனவே எங்களுக்காக அதிக ஊக்கமாக ஜெபியுங்கள். நீங்கள் சபையாகவோ அல்லது குழுவாகவோ இணைந்து இப்பயிற்சி முகாமை ஒழுங்கு செய்யலாம்.

ஆந்திர மாநிலம் ராஜமன்றி, துநி மாவட்டத்தில் ஆசிரியர்கள், வங்கி மேலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள், ஓய்வுபெற்ற அரசுப் பணியாளர்கள் சேர்ந்து கூட்டங்களை ஸ்பான்ஸர் செய்தது போல நீங்களும் ஸ்பான்ஸர் செய்யுங்கள். பரிசுத்த வேதம் **ஏசாயா 60:1,3ல்** சொல்வது போல நாம் எழும்பி பிரகாசிப்போம்.

கடந்த வல்லமை முகாம்களை ஒழுங்கு செய்த போதகர்கள் மற்றும் உதவி செய்த யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் எங்கள் நன்றிகளை தெரிவிக்கின்றோம். தொடர்ந்து பாஸ்டர் ஜோனத்தான் அவர்களின் அனுபவ சாட்சியை இங்கு குறிப்பிடுகிறேன்.

# அப்போஸ்தல முகாமின் எதிரொலி




Dr. ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த வேத அறிவை கண்டு கர்த்தரை துதிக்கிறோம். வேதப் புத்தகத்தை திறக்காமலேயே ஒவ்வொரு வகுப்பு நேரத்திலும் வேத வசனங்களை மிக சரியாக, அதற்கு ஒத்த வாக்கியங்களை, குறிப்பிட்ட அதிகாரம், வசனத்தோடு அவர் கூறியதை பார்க்கும் பொழுது உண்மையிலேயே கர்த்தர் தான் அவர் இருதயத்தில் வேதத்தை எழுதியிருக்கிறார் என்பதை உணர முடிந்தது. (எபிரெயர் 8:10; எஸ்றா 7:10) வேதத்தின் மகத்துவங்களை பரிசுத்த ஆவியானவர் தாமே சகோதரர் மூலம் எங்களுக்கு இவ்வளவு தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியமைக்காக தேவனை துதிக்கிறோம்.

பரலோகத்தை குறித்து எத்தனையோ பேர் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். இருப்பினும் கர்த்தருடைய வெளிப்பாடுகளை இதுவரைக்கும் உலகில் சகோதரனுடைய அனுபவத்தை போல யாருமே எழுதவும் இல்லை அதை அனுபவித்ததும் இல்லை. இயேசு கிறிஸ்துவின் பரலோக மகிமை, பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை குறித்து அவர் கூறியதை பார்க்கும்பொழுது நாங்கள் அனைவரும் கர்த்தராகிய இயேசுவின் வல்லமைகளை பெற முடியும் என்பதை அறிந்து கொண்டோம்.

நரகத்தையும், பாதாளத்தைஐம் குறித்து தெள்ளத் தெளிவாக இந்த இரண்டும் ஒன்றல்ல, இரண்டும் வெவ்வேறு இடங்கள், அதின் முடிவு என்ன, அதில் எப்படியாக ஆத்துமாக்கள் பிசாசினால் வேதனைப் படுத்தப்படுகிறார்கள் என்பதை கேட்டபொழுது அதிகமாய் எங்களை நடுங்க வைத்தது. தேவனுக்கு முன்பாக இன்னும் பயபக்தி ஏற்பட்டது. எங்களுடைய ஆலயம் முழுவதும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டது. அநேக மக்கள் பலவருட செய்வினைகள், ஏவல்கள், பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றனர். இதுவரையில் சபைகளில் காணப்படாதமிகப் பெரிய மாற்றத்தை நாங்கள் காணமுடிந்தது. சாதாரண விசுவாசிகளாக இருந்த எங்கள் சபை மக்கள், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளைப் போல எழும்பப் போகிறார்கள் என்பதை அறிந்து, அதிக சந்தோஷம் அடைந்தோம். மேலும் இந்த பயிற்சிக்கு பிற்பாடு சபையின் வளர்ச்சிக்காக அநேக ஜனங்கள் தங்களை அர்ப்பணித்தது எங்களுக்கு அதிக மகிழ்ச்சி. சுருக்கமாக சொன்னால் பயிற்சிக்கு பிறகு ஆவிக்குரிய பெரிய மாற்றம், நல்ல வளர்ச்சி சபையில் உண்டானது. தேவனுக்கே மகிமை!

- Pr. **ஜோனத்தான், ஹைதராபாத்.**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- ✶ **ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப் பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள்.**
- ✶ **பலவீனனையும் எளியவனையும் விடுவித்து... அவர்களைத் தப்புவியுங்கள் - சங்கீதம் 82:3,4**

அன்பான S J Saves Trust பங்காளர்களே!

கர்த்தருடைய வேதம் திட்டமும், தெளிவுமாக நமக்கு கூறுவது, **"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு கூறவேண்டும். அத்துடன் நாம் நம்மில் அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்பு கூற வேண்டும்"** என்பதே!

இவைகளிலும் பெரிய கற்பனை வேறு ஒன்றுமில்லை என்று இயேசு கிறிஸ்து **மாற்கு 12:30,31ல்** கூறுகிறார். ஆனால் இன்றைக்கு நாம் வாழும் உலகில் பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையில் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கிறதை பார்க்கிறோம்.

ஒரு சமயம் நான் ஒரு கிராமத்திற்கு சென்றிருந்தேன். அங்கு வயதான ஒரு ஏழை விதவையை சந்திக்க நேர்ந்தது. அவர்கள் வீட்டை சுற்றிலும் நல்ல கான்கிரீட் கட்டிடங்கள் காணப்பட்டன. வசதி படைத்தவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் இந்த வயதான ஏழை விதவையின் தங்கும் இடமோ வெறும் ஓலைக் குடிசை. குடிசையின் மண் சுவர்கள் பாதி இடிந்த நிலையில் காணப்பட்டது. மழை நேரத்தில் அந்த குடிசைக்குள் விஷபூச்சிகள் வந்தன. இந்த ஏழை விதவைக்கு உதவி செய்ய யாரும் இல்லாத சூழல். இந்நிலையில் அந்த தாய்க்கு நமது SJ Saves Trust மூலம் சிறிய அளவில் நல்லதொரு வீட்டை கட்டிக் கொடுக்க கர்த்தர் உதவி செய்தார்.

கடந்த நாட்களில் ஒரு ஏழை குடும்பத்தினரை சந்தித்தேன். அவர்களும் சாதராண எளிய வீட்டில் வாழ்ந்து வந்தனர். அந்த குடும்பத்தில் தாய், தந்தை, மூன்று பெண் பிள்ளைகள் என மொத்தம் ஐந்து பேர் இருந்தனர். பெண் பிள்ளைகள் மூவரும் வாலிப வயதை அடைந்திருந்தார்கள். நான் அவர்களை பார்த்து **"எப்படி இந்த சிறிய வீட்டிற்குள் ஐந்து பேர் வாழ்கிறீர்கள்"** எனக் கேட்டபொழுது, அந்த குடும்ப தலைவர் **"என்ன செய்வது ஐயா, நான் கல் உடைக்கும் தொழில் செய்பவன், என் மனைவியும் கல் உடைக்கும் வேலை செய்பவள். வேலை இருந்தால் தான் உண்டு, இல்லை என்றால் இல்லை. கல் உடைத்து விட்டு வரும் பொழுது கண், கைவிரல்கள் இருக்குமா என்பதே சந்தேகம்"** என கண்ணீரோடு கூறினார்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுமிகளை ஒரு சமயம் சந்தித்தேன். மூத்தவள் ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். இளையவளுக்கு வயது நான்கு. திடீரென்று ஒரு கொடூரமான வியாதியால் தாக்கப்பட்ட அந்த சிறுமிகளின் பெற்றோர் மரித்து விட்டனர். மூத்தவள் வேறு வழியின்றி தன் படிப்பை நிறுத்தி பூ பறிக்கும் வேலைக்கு சென்று, நான்கு வயதே நிரம்பிய, தன் தங்கையை காப்பாற்றிக் கொண்டிருந்தாள். அவள் பூ பறித்து சம்பாதிக்கும் மொத்த வருமானம் மாதத்திற்கு 900 ரூபாய். இந்த ஐந்தாவது படிக்கிற பிள்ளை தன் குடிசைக்கு முன் கருங்கல் வைத்து, விறகை உபயோகித்து அலுமினிய பாத்திரத்தில் சாப்பாடு தயார் செய்கிறாள். ஒரு வேளை உணவையே இவர்கள் இருவரும் சாப்பிடுகிறார்கள். நன்கு படிக்கின்ற பிள்ளை, பள்ளிக்கு போகாமல் தன் தங்கைக்காக வேலைக்கு போக வேண்டிய சூழ்நிலை.

SJ Saves Trust மூலம் உதவி பெறும் பிள்ளைகளிடம் நான் கேட்கும் பொழுது அவர்கள் "எங்களுக்கு கிடைப்பது ஒரு வேளை உணவு தான், இதை சாப்பிட்டு மீதத்தை வீட்டிற்கு கொண்டு போய் அம்மாவிற்கு சாப்பிடத் தருவேன். அப்பா குடித்து விட்டு வந்து அம்மாவை அடித்து, அம்மா சம்பாதிக்கும் பணத்தையும் கேட்டு வாங்கி குடித்து விடுவார்கள். எப்பொழுது பார்த்தாலும் பசி, பட்டினி,

வேதனை, சண்டைகள், பயங்கரங்கள் எங்களை சூழ்ந்திருக்கும்" என்று கூறினார்கள். எட்டாம் வகுப்பு படிக்கிற பிள்ளையை பார்த்தால் இரண்டாம் வகுப்பு படிக்கும் பிள்ளையின் சரீரம் போல மெலிந்து காணப்படும்.

இன்னொரு சம்பவத்தையும் கூறுகிறேன். பெற்றோர் படுத்த படுக்கை, அவர்களுடைய மகள் அரசு பள்ளியில் பயின்று, முதல் மாணவியாக திகழ்ந்தவள். தன்னுடைய வீட்டு வேலை செய்து, கூலி வேலைக்கு சென்று பெற்றோரை பாதுகாக்கும் பரிதாப நிலையில் காணப்பட்டாள்.

சில இடங்களில் அப்பா அம்மாவின் குடிப் பழக்கம், புகைப்பழக்கத்தின் நிமித்தம் பிள்ளைகள் கண் பார்வையை இழக்கிறார்கள். குழந்தைகளுக்கு போட வேண்டிய தடுப்பூசிகள் கூட போடுவதில்லை. இதன் நிமித்தம் குழந்தைகள் போலியோ வியாதி, செவிடு, ஊமை போன்ற கொடிய வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள். SJ Saves Trust மூலம் இவர்களுக்கு எல்லாம் நாம் உணவளித்து, இலவசமாக பாடங்கள் சொல்லி கொடுத்து வருகிறோம். இத்தகைய பணிகளை கடந்த 30 ஆண்டுகளாக நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். கர்த்தருக்கே மகிமை!

கடந்த கிறிஸ்துமஸ் காலத்திலும் அதை தொடர்ந்து வந்த மாதங்களிலும் அநேக கிராமங்களில் 300 ஏழை பிள்ளைகளுக்கு நல்லதொரு புத்தாடையும், **சேலம் மாவட்டம் ஜே.ஜே.நகர், அல்லிக்குட்டை, சேர்வராயன் பாளையம், வெள்ளாள குண்டம். செல்லம்பாளையம்** ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு சோப், பற்பொடி, பல்தேய்க்கும் பிரஸ், தேங்காய் எண்ணெய், சீப்பு, பவுச், நோட்புக், பேனா, பென்சில், ரப்பர், ஸ்கேல், ஜாமின்ட்ரி பாக்ஸ், முகக்கவசம், மற்றும் மருந்துகள் ஜிங்கோவிட் டானிக், புரோட்டின் பவுடர், காப் சிரப், வைட்டமின் மாத்திரைகள் மேலும், பிரியாணி, இனிப்பு மற்றும் கார வகை தின்பண்டங்களை வழங்கினோம்.

வருகிற மாதம் நாம் வயதான, ஆதரவற்ற அநேக விதவைகளுக்கு உதவி செய்ய வேண்டி இருக்கிறது. அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். பள்ளிகள் இல்லாத நாட்களிலும் ஏழை பிள்ளைகளுக்கு ஒவ்வொரு நாளும் நாம் உணவளிக்க வேண்டும்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

**எமது** You Tube **சேனல்களை** Subscribe **செய்யவும்**


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள்** (Face book)

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

சேலம் மாவட்டம் ஜே.ஜே. நகர், சேர்வராயன் பாளையம், வெள்ளாள குண்டம், செல்லம்பாளையம், அல்லிக்குட்டை ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.










# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி – மத்தேயு 9:36**

**அந்தச் சுற்றுப்புறமெங்கும் ஓடித் திரிந்து, பிணியாளிகளைப் படுக்கைகளில் கிடத்தி, அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட இடங்களிலெல்லாம் சுமந்து கொண்டு வந்தார்கள். அல்லாமலும் அவர் பிரவேசித்த கிராமங்கள் பட்டணங்கள் நாடுகள் எவைகளோ, அவைகளின் சந்தை வெளிகளிலே வியாதிக்காரரை வைத்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் – மாற்கு 6:55,56**

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த பொழுது வியாதியஸ்தர்களை கண்டு மனதுருகினார். நாம் வாழும் உலகில் எத்தனை புதிய புதிய மருந்துகளும், மருத்துவ சிகிச்சைகளும் கண்டுபிடிக்கப்பட்டாலும் வியாதிகள் பெருகிக் கொண்டு தான் போகிறது. வியாதி ஒரு மனுஷனை தாக்கும்பொழுது அந்த நபர் மிகவும் உடைந்து போவதை நாம் காண்கிறோம். **மாற்கு 5:25,26ல்** எழுதப்பட்டது போல வியாதி ஒருவரை தாக்கும் பொழுது அவரை சார்ந்த உறவினர்கள் மற்றும் உண்மையாக அவரை நேசிக்கும் நண்பர்கள் எதையும் பொருட்படுத்தாமல் உடனடியாக தங்களிடத்தில் இருக்கும் பணத்தை செலவழித்து நிலங்களை விற்று அந்த நோயாளியின் உயிர் பிழைத்தால் போதும் என்று முயற்சிக்கின்றனர். எனினும், விஞ்ஞானம் பெருகப் பெருக வியாதிகளும் பெருகுகிறது. அரசாங்கமும் புகழ்பெற்ற மருத்துவ ஸ்தாபனங்களும் தங்களால் இயன்ற உதவியை செய்தும் மக்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர்.

விசேஷமாக கிராம மக்கள் நன்கு படித்த, திறமையான மருத்துவர்களிடம் சிகிச்சைக்கு வருவதில்லை. அதற்குப் பதிலாக அனுபவம் வாய்ந்த கம்பவுண்டர், செவிலியர், அல்லது மருத்துவ தொழிலே தெரியாத, படிக்காத நபர்களிடத்தில் சென்று ஏதாவது ஒரு மாத்திரைகளை சாப்பிட்டு குணமானால் சரி என்று போய்விடுகின்றனர். கிராமத்து மக்களை பொருத்தவரை எது மலிவோ உடனடியாக அங்கு சென்றுவிடுகின்றனர். இதன் நிமித்தமாக அவர்கள் சில காலத்தில் அதிக வியாதிகளுக்குள் தள்ளப்படுகின்றனர். பிற்பாடு பெரிய பெரிய மருத்துவமனைகளுக்கு சென்று லட்சக் கணக்கில் செலவு செய்கின்றனர். இதை மனதில் வைத்து தான் SJ Saves Trust மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்த நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் ஏராளமான பணம் இந்த ஏழை மக்களுக்கு செலவழிக்கிறோம். இம்மக்கள் முழுவதும் இலவசமாகவே சிகிச்சை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். உங்களுக்கு தெரிந்தபடி இது நடைமுறையில் சாத்தியமில்லை. ஏனென்றால் நாங்களும் நல்ல மருந்துகளை தான் வாங்குகின்றோம். சிறந்த மருத்துவர்களை வைத்து தான் சிகிச்சை வழங்குகிறோம். இந்த மருத்துவமனை கடந்த நான்கு வருடமாக தேவ கிருபையால் நடந்து வருகிறது. இதை மனதில் வைத்து உங்கள் சார்பில் ஒரு மெடிக்கல் கேம்ப் அல்லது ஒரு நாள் மருத்துவ செலவை ஏற்றுக்கொள்ள **(ஒரு நாள் மருத்துவ செலவு ரூ.15,000 முதல் ரூ.20,000 வரைக்கும் ஆகும்)** முன் வருவீர்கள் என்றால் எங்களுக்கு மிகுந்த உபயோகமாக இருக்கும். அன்பரின் ஊழிய அன்பர்களாகிய நீங்கள் ஏழை மக்கள் மீது தயை கூர்ந்து உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். பிறருடைய வியாதிப்படுக்கைகளில் நாம் உதவி செய்யும் பொழுது கர்த்தர் உங்கள் வியாதிகளை தீர்ப்பார். கர்த்தருடைய கிருபையால் நல்ல ஒரு M.D.Dr-ம், M.S.Dr-ம் கிடைத்துள்ளார்கள். இது போக நல்ல அர்ப்பணிப்புள்ள M.B.B.S. Dr. கிடைக்க ஜெபியுங்கள். உங்களுக்கு யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## திருச்சியில்
## அற்புத விடுதலையின் ஜெபம்

- பிசாசின் பிடியில் துன்பப்படுவோர்
- பில்லிசூன்யம், ஏவல், செய்வினை கட்டுகளில் அகப்பட்டோர்
- மனநிலை பாதிக்கப்பட்டோர்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படும்
- முன் அனுமதி பெற்று வாருங்கள்

தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசி எண்கள்
**0431 – 2765386, 2741925**

**ஏப்ரல் 23**
சனிக்கிழமை

## திருச்சி

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமையன்று அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம் நடைபெற்று வருகிறது. இந்த மாதமும் தவறாமல் வாருங்கள்! அற்புதங்களைக் காண்பீர்கள்!

**ஏப்ரல் 30**
சனிக்கிழமை

**கடந்த மாத கூட்டத்தில் அநேக ஜனங்கள் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்**





இடம் : அன்பரின் ஊழிய ஜெப மையம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 18

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

*தேவ செய்தி:* Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

## வேலூரில்

### லெந்துகால தியான ஜெபம்

ஏப்ரல்
1, 2, 3
வெள்ளி, சனி, ஞாயிறு

தினமும்
மாலை 6.00
மணி

இடம் : C.S.I. மத்திய ஆலயம்,
வேலூர்.

### பங்காளர்களுக்கான விசேஷித்த குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : ஏப்ரல் 2 சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

இடம் :
C.S.I. மத்திய ஆலய வளாகம்,
வேலூர்

தேவ செய்தியாளர்கள்

**Dr. ஆனந்த ஸ்திரா / Dr. ஜேன் ஜாஷ்வா**

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627 & 94438 65161

---

விஜயவாடாவில்

### குடும்ப ஆசீர்வாத ஜெபம்

9 ஏப்ரல்
சனிக்கிழமை

இடம் : கண்டுகுறி திருமணமண்டபம்,
ஜிம்கானா மைதானம் அருகில்,
காந்திநகர், விஜயவாடா.


நேரம் :
காலை 9.00 மணி முதல்
மதியம் 3.00 மணி வரை

செகந்திராபாத்தில்

### பங்காளர் சந்திப்பு

10 ஏப்ரல்
ஞாயிற்றுக்கிழமை

இடம் : YMCA, S.P. ரோடு,
யசோதா மருத்துவமனை எதிரில்,
க்ளாக் டவர் அருகில்,
செகந்திராபாத்.



தேவ செய்தி:

**Dr. ஆனந்த ஸ்திரா**

நேரம் :
மாலை 3.00 மணி முதல்
இரவு 9.00 மணி வரை

Contact : 91770 87860
& 99445 36343